பக்கங்கள் 12

விலை ரூ. 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 38
கதிர் : 188

வெள்ளிக்கிழமை 02 ஜூன் 2023

வைகாசி 19 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## பங்களாதேஷ் கடனை செலுத்துவதற்குத் தயார்

கொழும்பு, ஜூன் 2
பங்களாதேஷில் இருந்து பெறப்பட்ட 200 மில்லியன் டொலர் கடனை, திரும்பிச் செலுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.
பங்களாதேஷிடமிருந்து பெறப்பட்ட கடனை திரும்பிச் செலுத்தும் இயலுமை இலங்கை அரசாங்கத்திடம் இல்லாத காரணத்தால்; »11



தட்டுப்பாடு ஏதுமில்லை

# போதியளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளது!

## அமைச்சர் காஞ்சன அறிவிப்பு

**கொழும்பு, ஜூன் 2**
**நாட்டில் போதியளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளது. எரிபொருள் தட்டுப்பாடு என்று வெளிவரும் தகவல்கள் போலியானவை என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.** »11

வவுனியாவில்

## கொலை வழக்கில் ஒருவருக்குத் தூக்கு

வவுனியா, ஜூன் 2
கடந்த 2013ஆம் ஆண்டு ஓட்டோச் சாரதியான சதாசிவம் குகானந்தன் என்பவரைக் கொலை செய்த குற்றச்சாட்டின் கீழ், பிறிதொரு ஓட்டோச் சாரதியான வவுனியா, தோணிக்கல் பகுதியைச் சேர்ந்தவருக்குத் தூக்குத் தண்டனை விதித்து உத்தரவிட்டார் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ் »11

## ஊழலைத் தடுக்க சிறப்புச் செயலணி

### ஜனாதிபதி ரணில் அறிவிப்பு



கொழும்பு, ஜூன் 2
இற்றைக்கு ஒரு வருடத்துக்கு முன்னர் இருந்த நிலைக்கு நாட்டை மீண்டும் இட்டுச்செல்ல யாரையும் அனுமதிக்கமாட்டோம். ஊழலை ஒழிப்பதற்கு சிறப்புச் செயலணி அமைக்கப்பட்டு எதிர்வரும் 2048ஆம் ஆண்டு அபிவிருத்தி அடைந்த நாட்டை உருவாக்குவதே எனது போராட்டம் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் தெரிவித்தார். நாட்டு மக்களுக்காக நேற்று ஆற்றிய உரையின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அரச நிதி மறுசீரமைப்பு, »11

ஐந்து ஆண்டுகளின் பின்

## இலங்கை முழுதும் இளைஞர்கள் வசம்

கொழும்பு, ஜூன் 2
ஐந்து ஆண்டுகளின் பின்னர், நாடு இளைஞர்களிடம் பாரப்படுத்தப்படும் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
நாட்டு மக்களுக்காக நேற்று ஆற்றிய உரையின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-
முதல் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, நாட்டைக் கட்டியெழுப்பும் பணி அடுத்த தலைமுறையினரிடம் ஒப்படைக்கப்படும். அதற்காக இளைஞர்களை »11



## விமலிடம் இழப்பீடு கோரினார் சவேந்திர

கொழும்பு, ஜூன் 2
முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸவிடம் இருந்து பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, இழப்பீடு கோரி கோரிக்கைக் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.
அண்மையில் வெளியான புத்தகத்தின் மூலம் தனக்கும் இராணுவத்தினருக்கும் அவப்பெயரை வீரவன்ஸ ஏற்படுத்தியுள்ளார் என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (அ-ம)

## கிளிநொச்சி மாவட்டத்தினூடாக மணல் கொண்டுசெல்லத் தடை!

கிளிநொச்சி, ஜூன் 2
சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்கும் விதமாக கிளிநொச்சி மாவட்டத்தினூடாக மணல் கொண்டு செல்வது நேற்று முதல் தடைசெய்யப்பட்டுள்ளது.
கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்றையதினம் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நடைபெற்றது. இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோத மணல் அகழ்வும் மணல் கடத்தலும் இடம்பெறுகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர்களும், பொதுமக்களும், பொது அமைப்பினரும் குற்றச்சாட்டுக்களை வைத்தனர். »11

பாண்டிச்சேரி - காங்கேசன்

## சரக்குக்கப்பல் சேவைக்கான அனுமதி வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 2
இலங்கையைச் சேர்ந்த ஹேலீஸ் நிறுவனத்துக்கு தென்னிந்தியாவுக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான சரக்குக் கப்பல் »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி காற்றாலைத் திட்டம் இப்போதைக்கு அனுமதியில்லை

## கிளி. ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தீர்மானம்

கிளிநொச்சி, ஜூன் 2

**கிளிநொச்சி - பூநகரி கௌதாரிமுனையில் காற்றாலை மின்னுற்பத்தி நிலையம் அமைப்பதற்கு கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்படவில்லை.**



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது இந்தியாவின் அதானி குழுமத்தால் பூநகரி - கௌதாரி முனைப் பகுதியில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்துக்கான அனுமதி தொடர்பில் வாதங்கள் இடம்பெற்றன.

குறித்த திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு முன்னர் கௌதாரி முனைக்குச் செல்லும் பிரதான வீதி தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும். அது காப்பெற் வீதியாக மாற்றப் படவேண்டும். அத்துடன் கௌதாரி முனைப் பகுதியில் இடம்பெறும் மண்ணகழ்வு தடுக்கப்படவில்லை. இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் வழங்கப்பட்ட உறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என மக்கள் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

அதனையடுத்து குறித்த விடயங்கள் தொடர்பில் முறையான நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவும், அதன் தொடர்ச்சியாக காற்றாலை திட்டத்துக்கு அனுமதி வழங்குவது தொடர்பில் ஆராயலாம் எனவும் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. (ச-113)

சப்தகன்னிமார் ஆலய தீர்த்தப்பாதை

# 14 வருடங்களின் பின்னர் அனுமதித்தது இராணுவம்

முல்லைத்தீவு ஜூன் 2

முல்லைத்தீவு - வட்டுவாகல் சப்தகன்னிமார் ஆலயத்துக்கு இடையூறின்றி தீர்த்தம் எடுத்து வர முல்லைத்தீவு மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வட்டுவாகல் சப்த கன்னிமார் ஆலயத்தின் தீர்த்தம் எடுக்கின்ற பாதை மற்றும் ஆலயத்தின் இறுதி உற்சவமான 'பரியழம் வழிவிடுதல்' உற்சவம் என்பன மேற்கொள்ளும் இடங்கள் 2009ஆம் ஆண்டின் பின் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டது.

ஆலயத்துக்கு தீர்த்தமெடுக்கும் பாதை இராணுவத்தினரால் மறிக்கப்பட்டமையால் கடந்த ஆண்டும் உற்சவ காலத்தில் இராணுவத்தினருக்கும் மக்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

இந்தநிலையில் ஆலய நிர்வாகத்தினரின் வேண்டுகோளுக்கமைய அந்தப் பகுதிக்கு நேற்றுமுன்தினம் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், மக்கள் எதிர்கொள்ளும் இடர்கள் தொடர்பாகவும் அந்தப் பாதையின் தேவை குறித்தும் இராணுவ கட்டளை அதிகாரிக்கு தெளிவுபடுத்தினார்.

அதன்பிரகாரம் இனிவரும் காலங்களில் இடையூறு இன்றி தீர்த்தம் எடுப்பதற்கு மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி அனுமதி வழங்கியுள்ளார்.

அனுமதி எழுத்து மூலம் வழங்கப்படும் எனவும் இராணுவ உயரதிகாரி குறிப்பிட்டார். (ச-19)




# மன்னார் நகரசபைக்கு தீயணைப்பு வாகனம்!

## ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்திக்க தீர்மானம்

மன்னார் பிரதேசசபையில் பாவனையற்றுக் காணப்படும் தீயணைப்பு வாகனத்தை நகரசபைக்கு மாற்றி செயற்படுத்துவதற்காக மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் மன்னார் மாவட்டத்துக்குரிய தீயணைப்பு வாகனம் தொடர்பில் ஆராயப்பட்டது.

மன்னார் பிரதேசசபையிடம் தீயணைக்கும் வாகனமொன்று உள்ளது. அது பாவிக்கப்படாத நிலையில் இருக்கின்றது.

அதனை மன்னார் நகரசபைக்கு வழங்குவதற்கு பிரதேசசபை சம்மதித்துள்ளபோதும் மன்னார் நகரசபையில் அதற்கான ஆளணிப் பற்றாக்குறையாகவே காணப்படுகின்றது. தீயணைப்புப் பணிக்கான வெற்றிடங்கள் தவிர மேலும் 14 வெற்றிடங்கள் மன்னார் நகரசபையில் காணப்படுகின்றன.

இந்த ஆளணி பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படுமாயின் வாகனத்தை மன்னார் நகரசபைக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ள முடியும் என மன்னார் நகரசபைச் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர், ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருவதாகத் தெரிவித்துள்ளமையால் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக வடக்கு மாகாண பிரதம செயலாளருடன் தொடர்புகொண்டு இதற்குரிய தீர்வை எட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. (ச-60)

# மன். சவுத்பார் கடலோரப் பகுதி; கடலட்டைப் பண்ணைக்காக ஆக்கிரமிப்பு

## சிறுமீன்பிடியாளர்கள் பாதிப்பென சுட்டிக்காட்டு

மன்னார், ஜூன் 2

மன்னார் சவுத்பார் கடலோரப் பகுதியிலுள்ள காணிகளை சட்ட விரோதமாக ஆக்கிரமித்து, கடலட்டைப் பண்ணைகள் அதிகளவில் முளைப்பதால் அந்தப் பகுதியிலுள்ள சிறுமீன்பிடியாளர்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மீனவ சங்கங்கள் சுட்டிக்காட்டின.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் அதன் தலைவரும் அமைச்சருமான காதர் மஸ்தான் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன்போது மன்னார் சவுத்பார் கரையோரப் பகுதியில் கடலட்டைப் பண்ணை வளர்ப்புக்காக அடாத்தாக காணி பிடிப்பதால் கரையோர மீன்பிடியாளர்கள் பாதிப்புறுகின்றனர் என கடற்றொழில் சங்கங்கள் கடும் கண்டனங்களை வெளியிட்டன. நாங்கள் அந்தப்பகுதி மீனவ சங்கங்களை அழைத்து கலந்துரையாடியிருந்தோம். கடலட்டை பண்ணைகள் அமைக்க மீனவ சங்கங்களின் ஒப்புதல் இல்லாமல் அனுமதியளிக்கவில்லை. ஆயினும் ஏழு எட்டு பண்ணைகள் முன்பு காணப்பட்ட நில்லையில் தற்போது அதன் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. ஒருவருடமாக இந்தப் பிரச்சினை தொடர்பில் பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டு வருகிறது என மன்னார் பிரதேச செயலர் எம்.பிரதீப் கூறினார். அதனையடுத்து, இது தொடர்பில் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள், அந்தப் பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்படும் கடலட்டைப் பண்ணைகளின் விவர அறிக்கையை அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிக்கவேண்டுமென இறுதியில் தீர்மானிக்கப்பட்டது. (ச-60)

# வவுனியாவில் திறக்கப்படாதுள்ள பொருளாதார மத்திய நிலையம்!

## பார்வையிட்ட மஸ்தான் குழு



வவுனியாவில் கடந்த 5 ஆண்டுகளாகத் திறக்கப்படாமலுள்ள பொருளாதார மத்திய நிலையத்தை கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் உள்ளிட்ட குழுவினர் நேற்றுமுன்தினம் சென்று பார்வையிட்டனர்.

வவுனியா - மூன்றுமுறிப்பு பகுதியில் 291 மில்லியன் பெறுமதியில் இழுபறிகளுக்கு மத்தியில் வவுனியா பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்பட்டது. ஆயினும் 5 வருடங்களுக்கு மேலாகியும் குறித்த பொருளாதார மத்திய நிலையம் திறக்கப்படாதுள்ள நிலையில், குறித்த பொருளாதார மத்திய நிலையத்தைத் திறப்பதற்காக அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரால் பார்வையிடப்பட்டது.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் பொருளாதார மத்திய நிலையத்தை இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் உள்ளிட்ட குழுவினர் பார்வையிட்டனர்.

விவசாய அமைச்சின் மேலதிக செயலாளர், வவுனியா மாவட்டச் செயலர் உள்ளிட்ட அதிகாரிகள் இதில் இணைந்திருந்தனர். (ச-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். நூலகத்தில்

# நூலக எரிப்பு நினைவு நேற்று கடைப்பிடிப்பு!

**யாழ்ப்பாணம், ஜூன் 2**

**யாழ்ப்பாணப் பொதுநூலகம் எரிக்கப்பட்ட 42 ஆவது ஆண்டு நினைவுதினம் யாழ்ப்பாண நூலகத்தில் நேற்று கடைப் பிடிக்கப்பட்டது.**

யாழ்ப்பாணம் பொது நூலக நிர்வாகத்தின் ஏற்பாட்டில் யாழ். பொது நூலகத்தில் பிரதம நூலகர் செல்வி ராகினி நடராஜ் தலைமையில் நினைவு கூரப் பட்டது.



இந்த நிகழ்வில் யாழ்ப்பாண பொது நூலகம் எரிக்கப்பட்ட போதும் அதனுடன் தொடர்புடைய சம்பவங்களில் உயிரிழந் தவர்களுக்கும் அஞ்சலி செலுத் தப்பட்டது.

அஞ்சலி நிகழ்வில் யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஆணையாளர் த.ஜெயசீலன், நூலக ஊழியர்கள், வாசகர்கள், உள்நாட்டு சுற்றுலாப்பயணிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்று அஞ்சலித்தனர்.

தென்கிழக்காசியாவிலேயே பெரிய நூலகமாகதிகழ்ந்தயாழ்ப் பாண நூலகத்தை எரித்தமை 20ஆம் நூற்றாண்டின் மிகப் பெரும் கலாசாரப் படுகொலை யாகக் கருதப்படுகின்றது. (ச)

# சான்றுப்பொருள் காப்பாளர்களை நாடு கடத்த நடவடிக்கை எடுக்குக

## வவுனியா மேல் நீதிமன்றம் உத்தரவு

வவுனியா, ஜூன் 2

வவுனியா நீதிவான் நீதிமன்றின் இருவேறு கொலை வழக்குகளின் சான்றுப்பொருள்களான தங்க நகைகள் காணாமற்போனமை தொடர்பில் அந்தக் காலப் பகுதியில் சான்றுப்பொருள் காப்பாளர்களாகக் கடமையாற்றி, தற்போது வெளிநாட்டுக்குத் தப்பித்துள்ள இருவரை நாடுகடத்துவது உள்ளிட்ட சட்ட நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறுசட்டமா அதிபர்திணைக் களம், வவுனியா நீதிவான் நீதிமன்றம் மற்றும் வவுனியா மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்க வாசகர் இளஞ்செழியன் கட்டளை வழங்கியுள்ளார்.

ஓமந்தை இரட்டைக் கொலை வழக்கு மற்றும் சமளங்குளம் இரட்டைக் கொலை வழக்கு களின் தீர்ப்பு வழங்கப்பட்ட நிலையில் அந்த வழக்குகளில் நேற்றுமுன்தினம் இவ்வாறு சிறப்புக் கட்டளை மன்றால் வழங்கப்பட்டது.

2009 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 16 ஆம் திகதி வவுனியா சமளங்குளம் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்து இருவரை சுட்டுக் கொலை செய்து நகைகள் உள்ளிட்ட பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப்பட்டன. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிக்கு இரட்டை தூக்குத் தண்டனை வழங்கி வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ் செழியன் தீர்ப்பளித்தார்.

இந்த வழக்கில் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் சிறப்புக் கட்டளை ஒன்றை சட்டமா அதிபர் திணைக்களம், வவுனியா நீதிவான் நீதிமன்றம் மற்றும் வவுனியா மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு வழங் கினார்.

"இந்த வழக்குடன் தொடர்புடைய சான்றுப்பொருளான நகைகள் (உருக்கப்பட்ட நிலையில்) பொலிஸாரால் வவுனியா நீதிவான் நீதிமன்ற சான்றுப் பொருள் காப்பாளர் சிவதாஸ் அனுகாந்த் என்பவரிடம் ஒப் படைக்கப்பட்டது. எனினும் அந்த நகைகள் காணாமற் போய்விட்டன" என்று வவுனியா நீதிவான் நீதிமன்றினால் மேல் நீதிமன்றுக்கு அறிக்கையிடப் பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணையில் முற்பட்ட வவுனியா நீதிவான் நீதிமன்றின் தற்போதைய சான்றுப்பொருள் காப்பாளர், அந்த நகைகள் தன்னிடம் ஒப் படைக்கப்படவில்லை என்று வாக்குமூலமளித்தார். நகைகளை பாரமெடுத்த சான்றுப் பொருள் காப்பாளர் சிவதாஸ் அனுகாந்த் வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றுள்ளார் என்றும் விசாரணைகளில் தெரிவிக் கப்பட்டுள்ளது. அவர் கனடா நாட்டில் வசிப்பதாக உறுதிப் படுத்தப்படாத தகவல்கள் தெரி விக்கின்றன.

அவர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான விசாரணைகளை முன்னெடுத்து நாடுகடத்துவதற்கான உத்தரவுகளைப் பெற சட்டமா அதிபர் திணைக்களம், வவுனியா நீதிவான் நீதிமன்றம் மற்றும் வவுனியா பிரதிப் பொலிஸ்மா அதிபர் முன்னெடுக்கவேண்டும் என்று சிறப்புக் கட்டளையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# ஆணித் தொழிற்சாலை யாழ்ப்பாணத்தில் உதயம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

சுழிபுரத்தில் ஆணித்தொழிற்சாலை மற்றும் தேங்காய் எண்ணெய் ஆலை என்பன நேற்றுக் காலை 9 மணியளவில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன.

தனியார் ஒருவரின் முதலீட்டில் இந்தத் தொழிற் சாலை திறந்துவைக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியை சுயதொழில் முயற்சியாண்மையூடாக நிவர்த்திக்கும் முகமாகவும் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் வகையிலும் இந்த ஆணித்தொழிற் சாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் சங்கானை பிரதேச செயலக ஏற்றுமதி உத்தியோகத்தர், கைத்தொழில் உத்தியோகத்தர்கள், ஆணித் தொழிற்சாலையின் முதலீட்டாளர் சண்முகம் தயாபரன், தொழிலதிபர்கள், சுழிபுரம் சமூக மட்ட அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-125)




பள்ளிக்கூடப் பிள்ளையளுக்கு படிப்பு ஒரு கண் என்டால், விளையாட்டு இன்னொரு கண். அப்பிடிப்பட்ட நிலையில ஒரு பள்ளிக்கூட அதிபரும், விளையாட்டுப் பொறுப்பாசிரியரும், கோட்டக் கல்வி அதிகாரியளும், வலய அதிகாரியளும் காட்டின அலட்சியத்தால், ஒரு பள்ளிக்கூட மகளிர் புட்போல் ரீம், மாகாண மட்டத்தில விளையாடமுடியாத நிலைமை வந்திருக்குது.

அந்தப் பள்ளிக்கூடம் முல்லைத்தீவு வலயத்தில உள்ள ஒரு மகா வித்தியாலயம். அங்க 19 வயசுக்குட்பட்ட பொம்பிளைப் பிள்ளையளுக் கான புட்போல் ரீம், கோட்ட மட்டத்திலயும், வலய மட்டத்திலையும் விளையாடி, மாகாண மட்டப் போட்டிக்கு போக தகுதி அடைஞ் சிருந்தது. எப்பிடியும் மாகாணத்திலயும் அந்தப் பிள்ளையள் வெல்லுவினம் எண்டுதான் எல்லாரும் நம்பியிருந்தவை. ஏனெண்டால் அந்தப் பிள்ளையள் உயிரைக் குடுத்துத் தான் ஒவ்வொரு போட்டியளிலையும் விளையாடுறதுகள். பிகில் படத்தில வாற ரீம் மாதிரி இருக்கெண்டுகூட, அந்தப் பிள்ளையளின்ர போட்டி யைப் பார்க்கிறவை சொல்லியிருக்கினம். அப்பிடியான திறமையும், ஓர்மமும் கொண்ட ரீம், மாகாண மட்டப் போட்டியில விளையாட முடியாது எண்டு பள்ளிக்கூடத்துக்கு அறிவிக்கப்பட்டிருக்கு.

அப்பிடி மாகாண மட்டப் போட்டியில விளையாட முடியாத அளவுக்கு அந்தப் பிள்ளையள் என்ன பிழை விட்டவை? உண்மையில பிள்ளையள் பிழைவிடேலை. பிழை விட்டது பெரியாக்கள்தான். 19 வயசுக்குட்பட்ட ரீமில 17 வயசுக்கு மேற்பட்ட அதேசமயம் 19 வயசுக்கு உட்பட்ட பிள்ளையள் தான் விளையாடமுடியும். வயசு கூடினாலும் விளையாட ஏலாது, வயசு குறைஞ்சாலும் விளையாட ஏலாது. ஆனால் அந்த மகாவித்தியாலய 19 வயசுக்குட்பட்ட பெண்களுக்கான புட்போல் ரீமில 16 வயசுப் பிள்ளையளும் விளையாடி இருக்கு. அதால தான் அந்த ரீம் மாகாண மட்டத்தில விளையாடத் தகுதியில்லை எண்டு அறிவிச்சிருக்கினம். இப்பிடி 19 வயசுக் குட்பட்ட ரீமில 16 வயசுப்பிள்ளை விளையாடக் கூடாது எண்ட ரூல்ஸ் பள்ளிக்கூட அதிபர், விளையாட்டுப் பொறுப்பாசிரியர், கோட்டக் கல்வி அதிகாரியள், வலய அதிகாரியள் எண்டு எல்லாருக்கும் தெரியும். ஆனால் தெரிஞ்சும் அவை விளையாட விட்டதால அல்லது அலட்சியமா இருந்ததால இப்ப ஒரு நல்ல ரீம் மாகாணத்தில விளையாடுற சான்ஸை மிஸ்பண்ணிட்டு நிக்குது.

மாகாணப் போட்டியில விளையாடப் போறம் எண்ட பிள்ளையளின்ர கனவில இப்பிடி பொறுப்பான பெரியாக்கள் மண்ணள்ளிப் போட்டிட்டினம். அவை முதலே ரூல்ஸ் எல்லாத்தையும் சரியாப் பார்த்து, பிள்ளையளின்ர வயசை செக் பண்ணியிருந்தால் முதலே இந்தப் பிரச்சினையைத் தீர்த்திருக்கலாம். ஒருவேளை, அப்பிடி முதலே 16 வயசுக்காரர், 19 வயசுக்குட்பட்ட அணியில விளையாடவே கூடாது எண்டு பள்ளிக்கூட அதிபரில இருந்து வலய அதிகாரிகள் வரை எல்லாரும் கண்டிப்பா இருந்திருந்தால், இதே பள்ளிக்கூடத்தில இருந்து 19 வயசுக்குட்பட்ட ஒரு ரீமும், 17 வயசுக்குட்பட்ட இன்னொரு ரீமும் போட்டிக்குப் போயிருக்கவும் கூடும்.

பிள்ளையளுக்கு இந்த ரூல்ஸ்களை வாசிச்சு, அதைப் பற்றி விளங்கப்படுத்தி, சரியான ட்ரெய்னிங் குடுத்து, போட்டியை நேர்மையா வெல்லுறது பற்றித்தான் பெரிய ஆக்கள் சொல்லிக் குடுக்கவேணும். ஆனால் ரூல்ஸில உள்ள ஓட்டையைக் கண்டுபிடிச்சு, என்ன திருகுதாளம் செய்தெண்டாலும் வெண்டால் காணுமெண்ட மாதிரி பிள்ளையளுக்கு வழிகாட்டுறது எவ்வளவு பெரிய பிழை. இனி அந்தப் பிள்ளையளுக்கு எப்பிடி புட்போல் விளையாட மனம் வரும்? பெரியவை செய்த பிழைக்கு பிள்ளையளோ பலிக்கடா?



- பசி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்துக்கென புதிதாக பல இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட திருமஞ்சத்தின் வெள்ளோட்டம் கடந்த திங்கட்கிழமை சிறப்புற இடம்பெற்றது. (ச-17)

## துணவி முருகனுக்கு இன்று தேர்

யாழ்ப்பாணம், ஜூன் 2

வட்டுக்கோட்டை துணவி தெவிண்டப்பிராய் முருகமூர்த்தி ஆலய மகோற்சவம் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

மகோற்சவத்தில் இன்று வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழா இடம்பெறவுள்ளது.

வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து முருகப்பெருமான் உள்வீதி வலம் வந்து காலை 9 மணிக்கு தேரில் ஆரோகணிக்கவுள்ளார். (ச)

## திப்பு சுல்தானின் வாள் ரூ. 140 கோடிக்கு ஏலம்





புதுடில்லி, ஜூன் 2

மைசூர் மன்னராக இருந்த திப்பு சுல்தான், பல போர்களில் பயன்படுத்திய வாள் 140 கோடி ரூபாவுக்கு ஏலம் போயுள்ளது.

பதினெட்டாம் நூற்றாண்டில் மைசூரை ஆண்ட மன்னர் திப்பு சுல்தான், 1782ஆம் ஆண்டு முதல் 12 ஆண்டுகள் மன்னராக ஆட்சிபுரிந்தார்.

'மைசூர் சிங்கம்' என்று அழைக்கப்படும் திப்பு சுல்தான் ஏவுகணை தொழில்நுட்பத்தின் முன்னோடியுமாவார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஒரு வீர வரலாறு படைத்தவர் திப்பு சுல்தான். ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக அவர் பல போர்க்களம் கண்டவர், அத்தோடு மராட்டியர்களோடும் களமாடி வெற்றிசூடியவர் திப்பு சுல்தான். இந்தப் போர்களில் எல்லாம் வெற்றியை சூடித்தந்த அந்த வாள் ஜேர்மன் பிளேடு வகையைச் சேர்ந்தது. திப்பு சுல்தானின் மறைவுக்குப் பிறகு இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் டேவிட் பேர்ட் என்பவருக்கு அவரது வீரத்தைப் பாராட்டி அந்த வாள் பரிசாக வழங்கப்பட்டது.

தற்போது லண்டனில் அருங்காட்சியத்தில் இந்த வாள் வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை ஏலத்தில் விடப்பட்டது. அதற்மைய திப்பு சுல்தானில் வாள் 140 கோடி ரூபாவுக்கு ஏலம் போயுள்ளது எனக் கூறப்படுகிறது. (ச-இ)

## மட்டுவில் மகாமுத்துமாரி அம்பாளுக்கு இன்று தேர்

சாவகச்சேரி, ஜூன் 2

மட்டுவில் சந்திரபுரம் ஸ்ரீ மகாமுத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா கடந்த 25ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

மகோற்சவப் பெருவிழாவில் தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு இடம்பெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ச-131)

## அலங்காரத் திருவிழா

கொடிகாமம் ஜூன். 2

வரணி - சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் கோயில் வருடாந்த அலங்காரத் திருவிழா எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமை விசாகப் பொங்கலுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 14 தினங்கள் நடைபெறும். (யு-9)

## நைஜீரியா புதிய அதிபராக போலா



அபுஜா, ஜூன் 2

நைஜீரியாவின் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் நைஜீரியாவின் 16 ஆவது அதிபராக போலா தினுபு பதவியேற்றுள்ளார். நைஜீரியா நாட்டில் அரசியல் ஸ்திரமற்ற நிலை காணப்பட்ட சூழலில், அதிபர் தேர்தல் நடத்தப்பட்டது.

எதிர்க்கட்சிகளால் தேர்தலுக்கு சட்டபூர்வ சவால் எழுந்த நிலையில், அந்த நாட்டின் புதிய அதிபராக போலா தினுபு நேற்று பதவியேற்று கொண்டுள்ளார். (ச-இ)

## பன்றித்தலைச்சி அம்பாள் விசாகப் பொங்கல் இன்று

சாவகச்சேரி, ஜூன் 2

வரலாற்றுச் சிறப்புபெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த விசாகப் பொங்கல் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

விசாகப் பொங்கலை முன்னிட்டு காலை 9 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. மாலை 5 மணிக்கு விசேட பூசை வழிபாடுகளுடன் திருவிளக்கேற்றுதலைத் தொடர்ந்து விசாகப் பொங்கல் இடம்பெறும்.

இதன்போது அம்பாள் திருவீதியுலா வந்து அருட்காட்சியளிக்கவுள்ளார் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ச-131)

## அறநெறி ஆசிரியர்களுக்கு கிளிநொச்சியில் பயிற்சி!



கிளிநொச்சி, ஜூன் 2

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தால் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு பயிற்சிப்பட்டறை கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன்விருத்தி நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது அறநெறி பாடசாலை ஆசிரியர்களின் முக்கியத்துவம் மற்றும் அறநெறி மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் முறைமைகள் தொடர்பில் இந்து கலாசார உத்தியோகத்தர் எஸ்.சுதாகரன் கருத்துரையாற்றினார். இறுதியில் பாடநூல்கள் மற்றும் அறநெறி ஆசிரியர்களுக்கான சீருடைகள் என்பன வழங்கப்பட்டன. (ச-113)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** மகிழ்ச்சியான நாள். மனதில் தைரியம் அதிகரிக்கும். எடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**இடபம்:** பணிகளில் பொறுமை அவசியம். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மிதுனம் :** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**கடகம்:** பிள்ளைகள் வகையில் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். இளைய சகோதரர்களால் ஆதாயம் ஏற்படும். சிலருக்கு பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. செலவு செய்ய நேரிடும். பொறுமை அவசியம்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். ஆதரவு கிடைப்பது மகிழ்ச்சி தரும். தாயின் உடல் ஆரோக்கியம் மேம்படும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கன்னி:** அதிகரிக்கும் செலவுகளால் மனதில் சஞ்சலம் ஏற்படும். சுபச்செய்தி வரும். சகோதர வகையில் சில சங்கடங்களை எதிர்கொள்ள நேரிடும். ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும்.

**துலாம்:** மனதில் உற்சாகம் ஏற்படும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடிவதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆதாயம் உண்டாகும்.

**விருச்சிகம்:** காரியங்கள் அனுகூலமாகும். உங்கள் பொறுப்புக்களை பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும். மனவருத்தங்கள் நீங்கும். சுமுகமான உறவு ஏற்படும்.

**தனுசு:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். கருத்து வேறுபாடு நீங்கும்.

**மகரம்:** பணவரவு இருந்தாலும் திடீர்ச் செலவுகளும் ஏற்பட்டு திக்குமுக்காட வைக்கும். சகோதரர்களிடம் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். மனவருத்தம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். செலவுசெய்ய நேரிடும். மற்றவர்களுடன் வீண் விவாதத்தில் ஈடுபட வேண்டாம். அனுசரித்துச் செல்வது நல்லது.

**மீனம்:** காரியங்கள் அனுகூலமாகும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. குழப்பங்கள் நீங்கும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். வழிபாடு நன்மையளிக்கும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## ஆபத்தாக மாறும் பாடசாலை இடைவிலகல்

யாழ். மாவட்டத்தில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு பாடசாலை இடைவிலகல் பல மடங்கு அதிகரித்துள்ளது. கொரோனாவின் பின்னான சூழல், கடும் பொருளாதார நெருக்கடி என்று கடந்த ஆண்டு அல்லோலகல்லோலப்பட்டபோதும் 355 மாணவர்களே யாழ்ப்பாணத்தின் 5 வலயங்களிலிருந்தும் இடைவிலகியிருந்தனர். ஆனால், இந்த ஆண்டின் முதல் காலாண்டில் மாத்திரம் 200 மாணவர்கள் இடைவிலகியுள்ளனர். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. இடைவிலகல் அதிகரிப்புக்கு பொருளாதார நெருக்கடியே முதன்மைக் காரணம் என்று வலயக் கல்விப் பணிப்பாளர்கள் தெரிவித்தனர். கடந்த ஆண்டில் பொருளாதார நெருக்கடி உச்சமாக இருந்தபோதுகூட இவ்வளவு எண்ணிக்கையில் இடைவிலகல் இருக்கவில்லை. அப்படியிருக்கையில் இந்த ஆண்டு பொருளாதார நெருக்கடியால் அதிகளவானோர் இடைவிலகியிருப்பதான அதிகாரிகளின் கூற்றை முழுமையாக ஏற்றுக்கொள்ளமுடியாது. இதிலிருந்தே இடைவிலகல் தொடர்பில் அதிகாரிகள் எவ்வளவு தூரம் அதன் ஆழத்தை உணர்ந்து ஆராய்ந்துள்ளார்கள் என்பது புலனாகும்.


அதேபோன்று யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் பேசப்பட்டபோது, அதிகாரிகள் சட்டத்துக்கு அமைவாக அதைச் செய்யலாம், இதைச் செய்யலாம் என்று கூறிக்கொண்டிருந்தனர். ஆக, சட்டத்துக்கு உட்பட்டே இந்த விடயத்தை அவர்கள் நோக்குகின்றார்கள். அதைத்தாண்டி அதிலுள்ள மனிதாபிமானத்தை கணக்கிலெடுக்கவில்லை என்பதும் வெளிப்படையாகத் தெரிகின்றது. இதன் காரணமாக இடைவிலகலுக்கான உண்மையான காரணம் கண்டறியப்படவில்லை. அது கண்டறியப்படாமல் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. அதிகாரிகள் வெறுமனே சட்டத்தையும், சுற்றறிக்கையையும் கொண்டு முடிவு கட்ட முடியாது. நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அதிபருமான சி.சிறீதரன் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அதிகாரிகள் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியபோது, சட்டத்தாலும் சுற்றறிக்கையாலும் இதனை அணுகமுடியாது என்றும் மானசீகமாகவே இதை அணுகித் தீர்க்கவேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் தான் ஒரு அதிபராக இந்த விடயத்தை எப்படிக் கையாண்டேன் என்பதையும் தெரிவித்திருந்தார்.

''கிளிநொச்சியில் அரிவி வெட்டுக்காலத்தில் மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தரமாட்டார்கள். அப்படியான மாணவர்களை நேரில் சந்தித்து அரிவி வெட்டு முடித்து தாமதமாக வருவதற்கு அனுமதித்திருந்தேன். சிலவேளைகளில் ஓரிரு நாள்கள் விடுப்பு எடுத்த பின்னரும் வருவதற்கு அனுமதித்திருந்தேன். அப்படிச் செய்வதன் ஊடாகவே மாணவர் இடைவிலகலைத் தணிக்க முடியும்'' என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மேலும் குறிப்பிட்டிருந்தார். அன்றைய காலத்தில் அதிபர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள் மாணவர் இடைவிலகலைத் தணிக்க எவ்வாறு செயற்பட்டார்கள் என்பதற்கு இது நல்லதொரு உதாரணம். மாணவனது வீடு தேடிச் சென்று அவனது இடைவிலகலுக்கு காரணத்தைக் கண்டறிந்து அதை எப்படிச் சாத்தியமான முறையில் தீர்க்கலாம் என்பதற்கு முன்னுதாரணம். இப்போது விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சில அதிகாரிகளே, மாணவர்களின் நலனை முதன்மைப் படுத்தி இடைவிலகும் மாணவர்களது வீடு தேடிச்சென்று அதற்கான காரணத்தை முடியுமானவரை நிவர்த்தி செய்து மீண்டும் பாடசாலைகளில் இணைக்கின்றனர்.

இந்தப் பிரச்சினையை மனிதாபிமான ரீதியில் அணுகித் தீர்க்காத வரையில் இது தொடரத்தான் போகின்றது. அது எதிர்காலத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். கல்வி அழியாச் சொத்து என்றும், தமிழர்களின் ஒரேயொரு சொத்து அதுதான் என்றும் பழம்பெருமை பேசிக்கொண்டிருக்கும் நாம் கண்முன்னால் அது அழிந்து கொண்டிருப்பதைத் தடுக்கமுடியாதவர்களாக, கையாலாகாதவர்களாக வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறோம். அதிகாரிகள் இனியும் சட்டத்தையும், சுற்றறிக்கையையும் துணைக்கு அழைத்துக்கொண்டிருக்காமல், சாத்தியமான வழிகளில் மாணவர்களின் இடைவிலகல் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக்காண முயலவேண்டும்.

நாளொரு நல்வார்த்தை

"குள்ளநரியைப்போல
100 ஆண்டுகள் பிழைப்பதைவிட
சிங்கத்தைப்போல ஒருநாள்
வாழ்ந்து மடியலாம்"
— திப்பு சுல்தான்



# நடாஷாவை கைது செய்தவர்கள் ஞானசாரரை என்ன செய்தனர்?

## சந்திரிகா குமாரதுங்க கேள்வி

**கொழும்பு, ஜுன் 2**

**பௌத்த மதத்தை அவமதித்தமைக்காக நடாஷாவைக் கைது செய்ய முடியும் என்றால் ஏனைய மதங்களை அவமதித்தமைக்காக ஏன் ஞானசாரரைக் கைது செய்ய முடியாது? என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கேள்வி எழுப்பியுள்ளார்.**

அவர் தனது ருவிற்றர் பதிவொன்றிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நடாஷா பௌத்த மதத்தை உள்நோக்கத்துடன் அவமதித்தமைக்காகக் கைது செய்யப்பட்டார். அவரைக் கைது செய்யமுடியும் என்றால் இஸ்லாமிய மதத்தை அவமதித்த, தேவாலயங்களையும் கிறிஸ்தவ வழிபாட்டு இடங்களையும், மசூதிகளையும் எரியூட்டிய ஞானசாரர் உட்பட ஏனைய பலரை ஏன் கைது செய்ய முடியாது?

முஸ்லிம்கள், தமிழ்ப் பிரஜைகளுக்கு எதிரான வெறுப்புணர்வு பேச்சுக்கள் நடாஷாவின் வார்த்தைகளைவிட தீய நோக்கம் கொண்டவை.

மருத்துவர் ஷாபிக்கு எதிராகப் பொய்களைத் தெரிவித்து நாடு முழுவதும் அதைப் பரப்பி நல்ல மனிதரின் வாழ்க்கையை அழித்த அயோக்கியர்களுக்கு என்ன நடந்தது? முன்னாள் ஜனாதிபதி குற்றவாளிகளைக் கைது செய்து தண்டிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இன்னமும் காலம் உள்ளது. அவ்வாறு அவர் செயற்பட்டால் அதுவே உண்மையான ஜனநாயக நாடாகக் காணப்படும்.

இலங்கை பௌத்தர்களாகிய நாங்கள் பௌத்த கொள்கைகளை நேர்மையாகப் பின்பற்றினால் இன்றுள்ளதுபோல நாடு குழப்பத்தில் காணப்படாது, பௌத்தம் உயர்ந்த மதிப்பை பெறவேண்டியது அவசியம். ஆனால், ஏனைய அனைத்து மதங்களும் சமமான முக்கியத்துவத்தைப் பெறவேண்டும் - என்றார்.

குருநாகல் மருத்துவமனை மருத்துவர் மீது பொய்க் குற்றச்சாட்டுச் சுமத்திய ராஸ்கல்கள் மீது ஏன் நடவடிக்கைகள் எடுக்கவில்லை எனவும் சந்திரிகா கேள்வி எழுப்பியுள்ளார். (எ-இ)

# வெளிநாட்டுப் பணிப்பெண்களின் பாதுகாப்பை உறுதிசெய்க

## கிளிநொச்சியில் கவனவீர்ப்பு

**கிளிநொச்சி, ஜுன் 2**

வடக்கு - கிழக்கு பெண்கள் கூட்டின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி பேருந்து நிலையம் முன்பாக நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

பணிப்பெண்களாக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டும். அங்கு சிக்குண்டுள்ள பெண்களை மீட்டு நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கவேண்டும். போலி முகவர்களை இல்லாது செய்ய வேண்டும் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை வலியுறுத்தி பதாகைகளை ஏந்தியவாறு பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை - வவுனியாவிலும் வெளிநாட்டுப் பணிப்பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வலியுறுத்தி கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று இடம்பெற்றது. (ச-113,110)

நாளை

03.06.2023
சனிக்கிழமை
வைகாசி 20

சுபநேரம் : 02.52 - 04.22
ராகுகாலம் : 08.52 - 10.22

பூரணை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்துச் சுதந்திரத்தைத் தடுக்க சர்வதேச சட்டம் பயன்படுகிறது

## மன்னிப்புச்சபை ஆதங்கம்


**கொழும்பு, ஜூன் 2**

**கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் கருவியாக குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கையை இலங்கை அரசாங்கம் முரண்பாடாக பயன்படுத்துகிறது என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.**

நகைச்சுவை நடிகை நடாஷா எதிரிசூரிய கைதுசெய்யப்பட்டமை தொடர்பில் இந்த விமர்சனத்தை சர்வதேச மன்னிப்புச்சபை வெளியிட்டுள்ளது.

சிறுபான்மையினரின் கருத்துச் சுதந்திரத்தின் நியாயமற்ற கட்டுப்பாடுகளுக்கு வழிவகுக்காத வகையில் சட்டங்கள், கொள்கைகள், கூடுமையான முறையில் பயன்படுத்தப்படுவதை இலங்கை அரசாங்கம் உறுதி செய்யவேண்டும்.

மனித உரிமைகள் உடன்படிக்கையை அங்கீகரித்து, இலங்கை கடைப்பிடிக்க உறுதியளித்த கடமைகளை உள்நாட்டுச் சட்டத்தில் அறிமுகப்படுத்துவதற்காகவே குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. உள்நாட்டில் கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த சர்வதேச சட்டத்தை மீண்டும் மீண்டும் இலங்கை அரசாங்கம் பயன்படுத்துகிறது. சிறுபான்மையினரை குறிவைக்கும் அடக்குமுறைக் கருவியாக சர்வதேச சட்டத்தைப் பயன்படுத்துவது முரண்பாடானது என மன்னிப்புச்சபை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)

## பல லட்சம் ரூபா செலவில் அமைத்த

# மீன்சந்தைக் கட்டடத்தை திறப்பதில் இழுத்தடிப்பு

## காரைநகர் மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

காரைநகர் பிரதேசசபையால் சுமார் 50 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய மீன்சந்தையை தனிநபரொருவரின் வருமானத்துக்காக திறப்பதற்கு அனுமதி வழங்காது இழுத்தடிப்புச் செய்யப்படுகின்றது என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

இதுதொடர்பில் காரைநகர் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளதாவது:

காரைநகர் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட சக்கலாவோடைப் பகுதியில் பிரதேசசபைக்குச் சொந்தமான காணியில் சுமார் 32 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய மீன்சந்தைக் கட்டடம் கடந்த ஜனவரி மாதம் திறந்து வைக்கப்பட்டது.

இந்தப் புதிய மீன்சந்தையில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன என்று சுட்டிக்காட்டிய சுகாதாரப் பிரிவினர், சந்தையைத் திறப்பதற்கு தடையேற்படுத்தினர்.

அதனையடுத்து பிரதேசசபை மேலும் 20 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கி சந்தையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்தது.

ஆயினும் இதுவரை சந்தை திறக்கப்படவில்லை. இதற்கு அந்தப் பகுதியில் உள்ள வர்த்தகர் ஒருவரே காரணம் என்று சந்தேகிக்கின்றோம். புதிய சந்தைக்கு மீன் வியாபாரிகளை மாற்றவிடாது பழைய இடத்தில் இரண்டடி உயரத்தில் வைத்து மீன்களை விற்பனை செய்யவேண்டும் என சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர் சுகாதாரப் பிரிவினர். ஆனால் தற்போது நிலத்திலிருந்து கொளுத்தும் வெயிலில் மீன் வியாபாரம் இடம்பெறுகின்றது.

சுமார் 50 லட்சம் ரூபா மக்கள் வரிப் பணத்தில் கொண்டமைந்த புதிய மீன் சந்தையை ஒரு தனியாரின் வருமானத்துக்காக இழுத்தடிப்புச் செய்வது அநீதியான செயலாகும். இது தொடர்பில் அரச அதிகாரிகள் கவனம்செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றனர்.

இதுதொடர்பில் காரைநகர் பிரதேசசபை செயலாளரிடம் கேட்டபோது,

மீன் வியாபாரிகளின் நலன்கருதி பல இலட்சம் ரூபா செலவில் புதிய மீன் சந்தைத் தொகுதி அமைத்துக் கொடுத்திருக்கிறோம். எமது ஆளுகைக்குட்பட்ட புதிய மீன் சந்தையில் குறைபாடுகளை நிவர்த்தி செய்து அனைத்து விடயங்களையும் செய்து கொடுத்துள்ளோம். சுகாதாரத் தரப்பினரே அதுதொடர்பில் கவனம் செலுத்தி அனுமதியளிக்க வேண்டும் - என்றார். (ச-20)

# நிர்வாக அலுவலர் நியமனம்

சாவகச்சேரி, ஜூன் 2

தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு நிர்வாக அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டு, அவர் தன் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

நிர்வாக அலுவலராகக் கடமையாற்றிய எஸ்.முரளி பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு இடமாற்றப்பட்டதை அடுத்து பதில் நிர்வாக அலுவலராக திருமதி ஜெ.ஜெயந்தி கடமையாற்றினார்.

தற்போது, திருமதி ஜெயசிறி சிவாணந்தராஜா நிர்வாக அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். (எ-ரி1)

# ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு விசேட கடன்

கொழும்பு, ஜூன் 2

இலங்கையின் பொருளாதாரத்தை மேலும் ஸ்திரப்படுத்த இலங்கைக்கு விசேட சலுகைகள் அடங்கிய கடனுதவியை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் வெளியிட்டுள்ளது.

இந்த கடன் கொள்கை அடிப்படையில் வரவு - செலவுத் திட்டத்தை வலுப்படுத்தும் நோக்கில் வழங்கப்படவுள்ளது என்று ஆசிய அபிவிருத்தி வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு 350 மில்லியன் அமெரிக்க டொலர் கடனாக வழங்கப்படவுள்ளது என்றும் இந்தக் கடனானது சர்வதேச நாணய நிதியத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள கடன் வசதியுடன் தொடர்புடையது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# கிராமஅலுவலர்கள் 3,000 வெற்றிடங்கள்

கொழும்பு, ஜூன் 2

நாட்டில் சுமார் 3 ஆயிரம் கிராமஅலுவலர் பிரிவுகளில் வெற்றிடங்கள் காணப்படுகின்றன என இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அதன் தலைவர் கமல் கித்சிறி தெரிவிக்கையில்,

2023ஆம் ஆண்டுக்கான வாக்காளர் கணக்கெடுப்புகள் கிராமஅலுவலர்கள் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றன.

அதற்கென வாக்காளர் பட்டியலுக்கான விவரங்களை கிராம அலுவலர்கள் வீடுகளுக்கு சென்று மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தநிலையில் கிராமஅலுவலர் பிரிவுகளில் 3 ஆயிரம் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதால் வாக்காளர்களை பதிவு செய்யும் பணிகளில் மிகவும் சிரமங்கள் உள்ளாகியுள்ளன- என்றார்.

இதேவேளை வாக்காளர் இடாப்பில் ஏதேனும் சிக்கல் இருப்பின் பிரதேச செயலாளர் அல்லது மாவட்ட தேர்தல் செயலகத்துக்கு அறிவிக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க மக்களிடம் கேட்டுக்கொண்டார். (ச-இ)

# கனடாவுக்குச் செல்ல முயற்சித்த இலங்கையர் டில்லியில் கைது

புதுடில்லி, ஜூன் 2

சட்டவிரோதமாக கனடா செல்ல முயன்ற 10 இலங்கையர்கள் புதுடில்லி விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சென்னையில் வசிக்கும் மகேந்திரராஜா என்ற இலங்கையை சேர்ந்த முகவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார் என இந்தியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்திய குடிவரவு - குடியகல்வுத்துறை அதிகாரிகளை ஏமாற்றி இலங்கையர்களை புதுடில்லி விமானநிலையத்தின் ஊடாக கனடாவுக்கு அனுப்ப முகவர்கள் முயற்சித்துள்ளனர் என்று இந்தியப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

எய்ரோ நகருக்கு அருகில் கைதுசெய்யப்பட்ட இலங்கையர்களால் தாங்கள் ஏன் புதுடில்லி வந்தோம் என்ற சரியான காரணத்தை தெரிவிக்க முடியவில்லை. அவர்களின் அடையாளங்களை உறுதி செய்வதற்கான ஆவணங்களைக் கேட்டோம். அவர்களால் அவற்றை காண்பிக்க முடியவில்லை. சந்தேகம் காரணமாக மேலதிக விசாரணைகளுக்காக அவர்களை பொலிஸ்நிலையத்துக்குக் கொண்டு வந்தோம் என்று புதுடில்லிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நீங்கள் சென்னை விமான நிலையத்துக்கு வாருங்கள் அங்கு ஒருமுகவர் நீங்கள் கனடாவுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளை செய்வார் என இலங்கையர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளமை விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையர்கள் வெவ்வேறு தினங்களில் சென்னை விமான நிலையத்துக்கு வந்துள்ளனர். மகேந்திரராஜா கடந்த ஞாயிற்றுக்கிழமை விமான நிலையத்துக்குச் சென்றுள்ளார். இலங்கையர்கள் பின்னர் புதுடில்லியில் பஹர்ஹான்ஜ் பகுதியில் உள்ள விடுதிக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். சம்பவ தினத்தன்று "சிக்கலொன்று ஏற்பட்டுள்ளதால் கனடா செல்லமுடியாது. அதனால் உங்கள் ஹோட்டலுக்கு திரும்பிச் செல்லுங்கள்" என்று முகவரால் அவர்களுக்குக் கூறப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொடிகாமத்திலுள்ள தனியார் நிறுவனமொன்றின் ஏற்பாட்டில், ஆடல் கலைகளை மையப்படுத்தி 'நட்சத்திர நர்த்தன சங்கமம்' என்ற நிகழ்ச்சி அண்மையில் நடத்தப்பட்டுள்ளது. வடக்கிலும் கிழக்கிலும் உள்ள கலைஞர்களை ஒழுங்கமைக்கும் நோக்கிலும், கலைகளைப் பலப்படுத்தும் விதமாகவும் இந்த 'நட்சத்திர நர்த்தன சங்கமம்' முன்னெடுக்கப்பட்டதுடன், வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.



## கருத்தமர்வு

அரச உத்தியோகத்தர்களுக்கான சூழல் பாதுகாப்புக் கருத்தமர்வு மடு பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் கடந்த 15ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் கரித்தாஸ் வாழ்வுதயத்தின் இயக்குனர் அருட்தந்தை செ.அன்ரன் 'இயற்கை வளங்கள் அழிக்கப்படுவதால் ஏற்படும் பாதிப்புகள் பற்றியும் மன்னார் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர் அருள்மலர் அந்தோனிப்பிள்ளை 'உலக வெப்பமாதல், கழிவு முகாமைத்துவம்' தொடர்பான கருத்துரையை வழங்கினார். (ய)



வடமாகாண பங்குதாரர்களுடன் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அமரா பெண் குடும்ப தலைவர்களின் கொள்கை பரிந்துரைகள் சமர்ப்பண நிகழ்வு அண்மையில் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியொன்றில் இடம்பெற்றது. இதன்போது பால்நிலை அடிப்படையிலான நீதியும் பாதுகாப்பும், பொருளாதார உரிமை வாழ்வாதாரம், சமூகப்பாதுகாப்பு, கல்வி,போசாக்கும் சுகாதாரம், சமூக அரசியல் உரிமைகள், சமூக கலாசார பிரச்சினைகள் உள்ளிட்டவை தொடர்பில் கருத்துரைகள் வழங்கப்பட்டன. (ச-20)



அனலைதீவு அருணோதயா முன்பள்ளி சிறார்களின் சந்தை கடந்த 22ஆம் திகதி திங்கட்கிழமை முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்றது. (ய-9)

வரணி - இயற்றாலை கலைவாணி முன்பள்ளி சிறார்களின் சந்தை நிகழ்வு கலைவாணி முன்பள்ளி முன்றிலில் கடந்த 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தென்மராட்சி வலயக்கல்வி தமிழ் பாட ஆசிரிய ஆலோசகரும் வரணி ஒன்றியம் யு.கே. செயலாளருமான வே.உதயகுமார் விருந்தினராகக் கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தார். (ய-159)





தமிழ் மக்கள் கூட்டணியின் கல்வி மேம்பாட்டுப் பிரிவின் ஏற்பாட்டில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இலவசக் கல்வி கருத்தரங்கு சித்தங்கேணிச் சந்தியிலுள்ள மகா கணபதி மண்டபத்தில் கடந்த 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது.

கருத்தரங்கில் பங்குபற்றும் மாணவர்களுக்கு கொழும்பு பிரபல பாடசாலைகளின் வினாத்தாளுடன் கூடிய கையேடுகள் மற்றும் கருத்தரங்கில் பங்குபற்றுவதற்குத் தேவையான எழுதுகருவிப் பொருட்கள் என்பன வழங்கப்பட்டது. (ய-125)



யாழ். மாவட்டச் செயலகம் மற்றும் 15 பிரதேச செயலகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட அரச அதிபர் வெற்றிக் கிண்ணப் போட்டியில், தெல்லிப்பழை பிரதேச செயலகம் அதிக வெற்றிகளைப் பெற்று சாதனை படைத்துள்ளது. யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த 24ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்ற போட்டியில், தெல்லிப்பழை பிரதேச செயலகம் தடகளப் போட்டி, பெண்களுக்கான துடுப்பாட்டப் போட்டி, ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கயிறுழுத்தல் போட்டி, ஆண்களுக்கான சதுரங்கப் போட்டி ஆகியவற்றில் முதலாம் இடத்தையும் பெண்களுக்கான சதுரங்கப் போட்டி, கலப்பு பூப்பந்து போட்டி, ஆண்கள் மற்றும் பெண்களுக்கான நாச்சிப் போட்டி [illegible] வலைப்பந்து போட்டி ஆகியவற்றில் இரண்டாம் இடத்தையும் [illegible] அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்தை [illegible] தூக்கிக் கொண்டது.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி பழைய மாணவர் ஆசிரியர் சங்க உப தலைவர் சிவகுரு சுப்பிரமணியம் நினைவாக சாவகச்சேரி சக்தியம்மன் தமிழ் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறையை கடந்த 22ஆம் திகதி திங்கட்கிழமை சங்கத் [illegible]யின் தலைவர் குமாரசாமி இரவிச்செல்வம் திரைநீக்கம் செய்து வைத்தார். (ய-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்- 18, கொழும்புத்துறை வீதி. ஆதன இல 581/86 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் திருமதி றிச்சேட் கான்ஸ்போவர் எலிசபேத் குயின் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம். குருநகர். மத்திய கிழக்கு வீதி இலக்கம் 25/2 ஜ, சேர்ந்த றிச்சேட் கான்ஸ்போவர் அவர்கள் தமது அற்றோனி திருமதி. எலிசபேத் குயின் றிச்சேட் கான்ஸ்போவர் மூலம் மற்றும் திருமதி. எலிசபேத் குயின் றிச்சேட் கான்ஸ்போவர் மறுநாமம் திருமதி. எலிசபேத் குயின் றிச்சேட் கான்ஸ்போலரும் 27.10.2014ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜெயச்சந்திரா ஸ்ரீதரன் முகதாவில் 2213ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் இல. 18/8, மத்திய கிழக்கு வீதி. குருநகரைச் சேர்ந்த சந்திரகுமார் நிறோசன் பெண் விதுஸ்ரா றெனுசியாவுக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம். குருநகர். புதிய கடற்கரை வீதி 93ஆம் இலக்கத்தைச் சேர்ந்த சாந்தகுமார் நிரோசனும் பெண் விதுஸ்ரா றெனுசியாவும் 05.09.2016ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு தேவராசா சுபாஜினி முகதாவில் 275ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம். தண்ணீர்த்தாங்கி வீதி. இலக்கம் 9Aச் சேர்ந்த அன்ரன் ஜோன்சன் மங்களேஸ்வரனும் பெண் மேரி கஜன்சியாவுக்கும் வழங்கியுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கொழும்புத்துறை இறை. **"அமரக்கோன் முதலியார் காட்டுத்தலைமடையும் மறுபிரிவுகளும்"** என்று வழங்கும் **"கொழும்புத்துறை தெருத்தோட்டம்"** நிலப்பரப்பு முந்நூற்றி எழுபத்தி ஐந்து (நிலப்பரப்பு 375) உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. கனகசபை அவர்களினால் 12.03.2012ல் அளந்து வரைந்த நில அளவைப்படத்தில் துண்டு 01 தொடக்கம் 10 வரையான துண்டுகளாக பிரிவிட்டு வரைந்த 4976/12ஆம் இலக்கத்தில் அளந்த நில அளவைப்படத்தின் படி நிலப்பரப்பு முந்நூற்றி எழுபத்தியாறு குளி பன்னிரெண்டு தசம் எட்டு (நிலப்பரப்பு 376 குளி 12.8) இதில் ஏற்கனவே அறுதியாக விற்கப்பட்டது போக மிகுதி நிலப்பரப்பு இருநூற்று இருபத்திரெண்டு குளி மூன்று தசம் ஒன்பது இரண்டு (நிலப்பரப்பு 222 குளி 3.92). இதில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. கனகசபையால் 05.12.2014 ஆக திகதியிட்டு 6088A/14ம் இலக்கத்தில் அளந்த நில அளவைப்படத்தில் துண்டு 22 (Lot 22) எனச் சுட்டப்பட்ட நிலப்பரப்பு ஒன்று (நில. பர. 01) இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. கனகசபையால் 21.12.2014 இல் வரைந்த 6088A- 22/14ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 1 (Lot 1) எனச் சுட்டப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பு ஒன்றுக்கும் எல்லை

கிழக்கு: குறித்த 6088A/14ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 21 எனக் காட்டப்பட்ட ஆதனம்
வடக்கு: குறித்த 6088A/14ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 9 என காட்டப்பட்ட ஆதனம்
மேற்கு: குறித்த 6088A/14ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 23 எனக் காட்டப்பட்ட ஆதனம்
தெற்கு: ஆறு மீற்றர் அகலப்பாதை இதடங்கலும் இன்னும் இவ்வாதனத்திற்கு தெற்கே உள்ள ஆறு மீற்றர் அகலமுள்ள பாதையால் பிரதான வீதிக்குப் போக்குவரத்து செய்யுமுரித்தும். இவ்வாதனம் யாழ்ப்பாணம் மாநகர சபையின் எல்லைக்குள் வருவதுடன் யாழ்ப்பாண பிரதேச செயலகம் J/61 கிராம சேவையாளர் பிரிவிலும். அமைந்துள்ளது.

தற்போது அன்ரன் ஜோன்சன் மங்களேஸ்வரனும் பெண் மேரி கஜன்சியாவும் இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும். உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது அன்ரன் ஜோன்சன் மங்களேஸ்வரனும் பெண் மேரி கஜன்சியா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்.**
**மாநகர சபை.**
**யாழ்ப்பாணம்.**

## மணமகள் தேவை

1978 ஆம் ஆண்டு பிறந்த யாழ். கௌரவ குடும்ப றோமன் கத்தோலிக்கம், லக்கினத்தில் சூரியன், செவ்வாய், புதன் உள்ள UK மணமகனுக்கு மணமகள் தேவை. (பாவம் 25 1/2, கார்த்திகை 3ஆம் பாதம்) (இந்து மதமும் ஏற்றுக் கொள்ளப்படும்) (விவாகரத்தானவர் - திருமணமாகி 3 கிழமை)

(CS/50627)AH-1)

**077 711 1041**

## தேவை

புத்தூரில் சிமெந்தில் பூச்சாடிகள் உற்பத்தி செய்யக்கூடிய அனுபவம் உள்ளவர்கள் தேவை. சம்பளம் நேரில்

(cs 797) (N-1)

**077 382 9451**

## மரண அறிவித்தல்



### கதிர்காமு சீவரத்தினம்

(முன்னாள் காசாளர் நெஷ்லே நிறுவனம்)

உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற கதிர்காமு செல்லமுத்து இணையரின் அன்பு மகன் சீவரத்தினம் (முன்னாள் காசாளர் நெஷ்லே நிறுவனம்) இலண்டனில் காலமாகிவிட்டார்.

இவர் உருத்ராணியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், சியாமளனின் அன்புத் தந்தையும், சிவபாக்கியம், காலஞ்சென்ற தனபாலசிங்கம் (வரி மதிப்பீட்டாளர் - இறைவரித் திணைக்களம்), காலஞ்சென்ற இராசரத்தினம் (நலவாழ்வுத் திணைக்களம் - யாழ்ப்பாணம், அநுராதபுரம், கொழும்பு), யோகம்மா, ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் சிவபாதசேகரம், பற்குணநாதன், ஓய்வுபெற்ற அஞ்சலதிபர் விமலநாதன் ஆகியோரின் அன்பு உடன்பிறப்பும் ஆவார்.

இறுதிச் சடங்குகள் 2023 யூன் 4 ஞாயிற்றுக்கிழமை இலண்டனில் நடைபெறும்


**45/3, பலாலி வீதி தெற்கு,**
**உரும்பிராய்.**

**தகவல்:**
**க.விமலநாதன்**

(Cs50635) N-1

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை இராஜகோபால்



பிறப்பு 05.04.1944 — இறப்பு 01.06.2023

ஈவினை புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி தெற்கு, நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை இராஜகோபால் நேற்று (01.06.2023) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும், கஜேந்திரன், கயரூபன், தர்மராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருஷாந்தி, மகேந்திரநாதன் ஆகியோரின் அன்பு மாமாவும், புஸ்பமலர் காலஞ்சென்ற விஸ்வநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகாலிங்கம், பகவத்சிங்கம், கமலேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், தனுஜா, திவ்வியா, விலகரி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.06.2023 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**குருந்தடி வீதி,**
**நீர்வேலிதெற்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

தொடர்பு: **077 339 8638**
**+ 614 507 98411**

(cs.50637) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கண்டாவளையில் டெங்கு ஒழிப்பு

கிளிநொச்சி, ஜூன் 2

கிளிநொச்சி - கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் கீழுள்ள விசுவமடு வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் டெங்கு ஒழிப்பு சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ள பிரதான வீதியின் இரு மருங்குகளிலுமுள்ள பிளாஸ்ரிக் கழிவுகள், பொலித்தீன்கள், குப்பைகூளங்கள் அகற்றப்பட்டன. சிரமதானத்தில் கிராம அலுவலர் மற்றும் சுகாதாரப் பரிசோதகர்கள், வர்த்தகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ச-113)

உங்கள் நிதித் தேவைக்காக விரைவாக சொத்துக் கடனுக்கு அழையுங்கள்.
0762488353

## பிரதமர் தாய்லாந்து பயணம்

பிரதமர் தினேஷ் குணவர்த்தன உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு நேற்று முன்தினம் புதன்கிழமை தாய்லாந்து சென்றுள்ளார். தாய்லாந்தில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் வெசாக் நிகழ்வில் பிரதமர் பங்கேற்கவுள்ளார் என பிரதமர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இதன்போது தாய்லாந்து மன்னர் மற்றும் பிரதமர் உள்ளிட்ட இராஜதந்திரிகளையும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன சந்திக்கவுள்ளார். (ச-இ)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியில் சேவையாற்றி ஓய்வுபெற்ற மூத்த ஆசான்



**வைரமுத்து நாகநாதன்**

அவர்கள் நேற்று (01.06.2023) வியாழக்கிழமை இறையடி சேர்ந்த செய்தியறிந்து மனவேதனை அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சேவையாளர் சங்கம்,**
**யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.**

(CR 39943) A-1

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்திசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி M.நிஷாந்தினி** அவர்களின் அன்புத் தந்தை **சின்னத்துரை கனகரட்ணம்** அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரிச் சங்கம்,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 14 11 1948



இறப்பு 15 06 2019

அமரர் திருமதி

### சறோஜினிதேவி கோபாலபிள்ளை

திதி : வைகாசித் திங்கள் பூர்வபக்க சதுர்த்தசி (02.06.2023)

எமது அருமை அன்புத் தெய்வமே அம்மா
எமைப்பிரிந்து நான்காண்டுகள் சென்றனவே
தாயிற் சிறந்த கோவிலும் இல்லை
தன்னலமற்றது தாய்மையின் உள்ளம்
ஆயிரம் உறவுகளில் பெருமைகள் இல்லை
அன்னை தந்தையே அன்பின் எல்லை அம்மா

அம்மாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

2/1, மூர்த்த விநாயகர் வீதி,
கடுக்காயடிலேன்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

(cs.50598) (N-1)

## மரண அறிவித்தல்

பிறப்பு 08 02 1962



இறப்பு 01 06 2023

### திரு. வைரமுத்து நாகநாதன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி)

முடக்காடு, நெல்லியடி கிழக்கை பிறப்பிடமாகவும், கற்குழி முதலாம் ஒழுங்கை, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வைரமுத்து நாகநாதன் அவர்கள் நேற்று (01.06.2023) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து சீதேவி தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்ற சுந்தரம் செல்லம்மா தம்பதியரின் மருமகனும், சிவபாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும், நிதர்சன் (Senkadakala Finance Chavakachcheri), நிதர்ஷா, பகீரதி (Alliance Finance - Chavakachcheri) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரதீஸ் அவர்களின் பாசமிகு மாமனாரும், விஹாசினி, மிதுன் ஆகியோரின் பாசமிகு "டடாவும்" காலஞ்சென்ற நாகராசா மற்றும் நாகதேவி, நாகராணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், மாலினி, மாதவன், மாலதி, ரகுநாதன், சாரூபன், ரகுராம், நிலோஜினி, நிதர்ஷன், ஆரணி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ரமேஷன், நந்திகா, ரவிசங்கர், ராகவன், ராம்குமார் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2023) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு பி.ப 2 மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**076 5535 256,**
**077 0042 446.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CR 39942) A-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 24 09 1943



இறப்பு 01 06 2023

கலைவாரிதி

### திருமதி மகாதேவன் லலிதாம்பாள் (லலிதா)

மாவடி, வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவருமாகிய கலைவாரிதி திருமதி மகாதேவன் லலிதாம்பாள் (லலிதா) அவர்கள் நேற்று (01.06.2023) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் திரு.இராசையா மகாதேவன் (தேவு மாஸ்டர், CTB சாரதி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி சுருதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசையா பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், தேவமனோகரி (கிராம அலுவலர் J/159 சங்கரத்தை), தரணீதரன் (அதிபர், யா/ஈவினை அ.த.க. பாடசாலை), சசிதரன் (அரச நிலஅளவையாளர், பிரதேச நில அளவைக் காரியாலயம், பூநகரி), முரளீதரன் (கணக்காளர், அண்ணா கோப்பி, யாழ். கிளை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜீவசிங்க, நோபாலசிங்க, சந்திரசிங்க, அமரர் கிரிபாலசிங்க, குசேலா, நேசராணி, யுகசொரூபி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கலைச்செல்வன், கவிதா (உடுவில், பிரதேச செயலகம்), யுகிதா (மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்), சிவரூபி ஆகியோரின் அன்பு மாமியாரும், பரணிகா, ரகுபரன், அருணி, அகிலவன், கோசிகன், விஷ்ணுவர்த்தனன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**மாவடி, வட்டு கிழக்கு,**
**வட்டுக்கோட்டை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 25112) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஊடகவியலாளர் நடேசனுக்கு மக்கள் முன்னணி அஞ்சலி!

யாழ்ப்பாணம், ஜூன் 2

படுகொலை செய்யப்பட்ட நாட்டுப்பற்றாளரான மூத்த ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 19 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்றுமுன்தினம் புதன் கிழமை கடைப்பிடிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கட்சியின் அலுவலகத்தில் நிகழ்வு இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணிச் செயலாளர் திருமதி கிருபா கிரிதரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுடரேற்றி வைத்தார்.

தொடர்ந்து படுகொலை செய்யப்பட்ட நாட்டுப்பற்றாளர் நடேசனுக்கும் போரில் கொல்லப்பட்ட மாவீரர்களுக்கும் மலராஞ்சலியும் செலுத்தப்பட்டது.

கடந்த 2014ஆம் ஆண்டு ஊடகவியலாளரான ஐயாத்துரை நடேசன், மட்டக்களப்பிலுள்ள தனது வீட்டிலிருந்து பணிக்குச் செல்லும்போது சுட்டுப்படுகொலை செய்யப்பட்டாரென்பது குறிப்பிடத்தக்கது. (ச-66)

# வவு.குடிவரவு திணைக்களத்தில் கடவுச்சீட்டு பெறுவதில் மோசடி

## 10 பேர் அதிரடியாகக் கைது

வவுனியா, ஜூன் 2

**வவுனியாவில் அமைந்துள்ள குடிவரவு, குடியகல்வு பிராந்தியக் காரியாலயம் முன்பாக கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 10 பேரை வவுனியா பொலிஸார் அதிரடியாகக் கைதுசெய்துள்ளனர்.**

சரியான நிர்வாக முறைமையின் மையை பின்பற்றி கடவுச்சீட்டைப் பெறுவதற்கு வழிவகுத்ததாகக் குற்றச்சாட்டில் அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா குடிவரவு, குடியகல்வு பிராந்திய காரியாலயம் முன்பாக வரிசையைப் பெற்றுக்கொடுப்பதற்கு 5 ஆயிரம் ரூபாவும் வரிசையின்றி உரிய நடைமுறைகளுக்கு அப்பால் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொடுக்க 25 ஆயிரம் ரூபாவும் இடைத்தரகர்களால் பெறப்படுகிறது என வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

அதனையடுத்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார், சந்தேகத்துக்கிடமான முறையில் குறித்த காரியாலயம் முன்பாக இரவில் ஒன்று கூடியோர், பணத்துக்காக வரிசையில் நின்றோர் என சந்தேகத்தின் பேரில் 10 பேரை கைதுசெய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-18)

## வேலியைப் பிடுங்கிய விஷமிகள் கால்நடையால் பயிர்கள் அழிவு

பளை, ஜூன் 2

விளைநிலத்தைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த முட்கம்பி வேலியை விஷமிகள் பிடுங்கியெறிந்துள்ளதால் பயிரிடப்பட்ட சிறுதானியப் பயிர்கள் கால்நடைகளால் அழிவடைந்துள்ளன என ஆனைவிழுந்தான் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கச்சார்வெளி - ஆனைவிழுந்தான் வயல் நிலங்களில் கௌபி உள்ளிட்ட விளைபயிர்கள் பயிரிடப்பட்டு அறுவடைக்குத் தயார் நிலையில் இருந்தன.

நேற்றுமுன்தினம் இரவு இந்த விளைநிலங்களில் அமைக்கப்பட்டிருந்த முட்கம்பி வேலியை இனந்தெரியாத விஷமிகள் பிடுங்கியெறிந்து நாசம் செய்துள்ளனர். அதனால் பெருமளவு விளைபயிர்கள் கால்நடைகளால் அழிவடைந்துள்ளன என செய்கையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதுதொடர்பில் பளை பொலிஸ் நிலையத்தில் உரிமையாளரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ச-9)

## பயன்தரு மரம் நட விரும்புவோர் சீர் திருத்த அலகை அணுகலாம்!

சாவகச்சேரி, ஜூலை 2

தென்மராட்சிப் பிரதேசத்தில் பொது அமைப்புக்களின் கட்டடங்கள், கோயில்கள், பாடசாலை போன்றவற்றில் பயன்தரு மரங்களை நட விரும்புவோர் சாவகச்சேரி நீதிமன்ற சமுதாயஞ்சார் சீர் திருத்த அலகுடன் தொடர்புகொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸாரால் தாக்கல் செய்யப்படும் மதுபோதையில் சாரத்தியம் செய்தோருக்கான வழக்குகளில் குற்றவாளிகளாக் இனங்காணப்படுவோர் தண்டம் செலுத்துவதுடன், சமூகப் பணிகளிலும் ஈடுபட வேண்டும்.

சமூகப் பணியில் ஈடுபடுமாறு நீதிமன்றால் கட்டளையிடப்படுவோர் பொது இடங்கள் மற்றும் கோயில்களில் மரங்களை நாட்டி 40 முதல் 80 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுவதுடன், அததன் அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டும். மரங்கள் பராமரிப்பில் முன்னேற்றம் காணும்வரை நீதிமன்றக் கட்டளை நடைமுறையில் இருக்கும். இந்த வருடத்தின் முதல் ஐந்து மாதங்களில் 103 பேர் இவ்வாறான தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அதனால் பொது இடங்கள் மற்றும் கோயில்கள் போன்ற இடங்களில் பயன்தரு மரங்கள் மற்றும் பழமரக் கன்றுகளை நட விரும்புவோர் சீர்திருத்தல அலகுடன் தொடர்புகொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

## நாட்டில் அடுத்த வருடத்தில் மிதக்கும் சூரியசக்தி திட்டம்

### கொரியாவுடன் ஒப்பந்தம்

கொழும்பு, ஜூன் 2

இலங்கையில் முதலாவது மிதக்கும் சூரியசக்தி திட்டத்தை அடுத்த ஆண்டில் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென கொரிய அரசாங்கம் 5.2 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கியுள்ளது.

இதற்கான ஒப்பந்தத்தை மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர நேற்று புதன்கிழமை கொரியா தொழில்நுட்ப மேம்பாட்டு நிறுவனம் ஒன்றுடன் கையெழுத்திட்டார்.

சப்ரகமுவ மாகாணத்தில் சந்திரிகா ஏரி மற்றும் ஊவா மாகாணத்தின் கிரிப்பன் குளம் ஆகியவற்றில் இந்த மிதக்கும் சூரியசக்தி திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

2024ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துக்குள் இந்தத் திட்டத்தை நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது என அமைச்சர் காஞ்சன விஜயசேகர மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

# ஊடக சமத்துவத்தைப் பேண புதிய சட்டவரைவு விரைவில்

## நீதியமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 2

ஊடக சமத்துவத்தைப் பேணுவதற்கும் ஊடக நிறுவனங்களுக்கு சட்டபூர்வமான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கும் ஒளிபரப்பு வெளியீட்டு அதிகாரசபையால் சட்டவரைவு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டவரைவினூடாக ஊடகங்களுக்கோ அல்லது சமூக வலைத்தளங்களுக்கோ இடையூறு ஏற்படுத்தப்படமாட்டாது என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அமைச்சின் அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

ஊடக கட்டுப்பாடு அல்லது சமூக வலைத்தளங்களை அடக்குமுறைக்கு உட்படுத்துவதற்கானதல்ல இந்த ஒளிபரப்பு வெளியீடு அதிகாரசபை சட்டம்.

தற்போதுள்ள ஊடக நிறுவனங்களுக்கு செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரம் இல்லை. அதற்கான தனியான சட்டங்கள் உருவாக்கப்படவில்லை.

சகல தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும் ஒளிபரப்பு அனுமதிப்பத்திரங்களை வழங்கியுள்ளோம். இந்த அனுமதிப்பத்திர விடயத்தில் சமத்துவம் பேணப்படவில்லை.

அதன்காரணமாக இந்த ஒளிபரப்பு வெளியீட்டு அதிகாரசபையால் சட்டவரைவைக் கொண்டுவந்துள்ளோம். சட்டவரைவுக்கான பணிகள் நிறைவடைந்துள்ளன. சட்டபூர்வமான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காகவும் சகல நிறுவனங்களுக்கும் சமமான நிபந்தனைகளை வழங்குவதற்காகவுமே இது சட்டம் உருவாக்கப்படுகின்றது. சகல ஊடக நிறுவனங்களுடனும் கலந்துரையாடியதன் பின்னரே சட்டவரைவு சமர்ப்பிக்கப்படும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 400 போதை மாத்திரையுடன் சந்தேகநபர்கள் கைது

முல்லைத்தீவு, ஜூன் 2

400 போதைமாத்திரைகளை வைத்திருந்த குற்றச்சாட்டின்கீழ் முல்லைத்தீவை சேர்ந்த இருவர் பேலியகொடை துட்டகைமுனு பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர். விசேட அதிரடிப் படையினருக்கு நேற்றுமுன்தினம் கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு தேடுதலில் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். முல்லைத்தீவைச் சேர்ந்த 28 வயதான இருவரே கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)



அரியாலை முருகமூர்த்தி ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்றைய தினம் பலநூறு பக்தர்களின் பக்திப்பூர்வமான பங்கேற்புடன் இடம் பெற்றது. (ம)

# அணுமின் உற்பத்திகள் அழிவுக்குப் பயன்படாது

## ஜனாதிபதி ரணில் வாக்குறுதி



கொழும்பு, ஜூன் 2

இலங்கை அணுமின் உற்பத்திகளையும், அந்தத் துறைசார் நடவடிக்கைகளையும் அழிவுக்குப் பயன்படுத்தாது என்று அணுப் பரிசோதனை தடை நிறுவனத்தின் செயலாளரிடம் வாக்குறுதி வழங்கினார் ஜனாதிபதி ரணில்.

இலங்கைக்கு நான்கு நாள் பயணத்தை மேற்கொண்டுள்ள அணு பரிசோதனை தடை நிலையத்தின் நிறைவேற்றுச் செயலாளர் றொபேர்ட் புளொய்ட், ஜனாதிபதி ரணிலை நேற்றுச் சந்தித்துப் பேசினார். இதன்போதே ரணில் இவ்வாறு வாக்குறுதியை வழங்கினார்.

அணுப் பரிசோதனை தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட நாடுகளில் ஒன்றாக இலங்கை உள்ளது. எனினும், கண்டியில் அணுப்பரிசோதனைநிலையமொன்று இலங்கைக்குச் சொந்தமாக உள்ளது. இந்த நிலையம், மின்னுற்பத்திக்காக இனி அளதிகளவு பயன்படுத்தப்படலாம் என்ற அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வரும் நிலையில், ஜனாதிபதி இவ்வாறான தொரு வாக்குறுதியை வழங்கியுள்ளார்.

அணுப்பரவல் தடையொப்பந்தத்தை மீறிய ஈரானுக்கு விதிக்கப்பட்ட பெருமளவு தடைகளின் பின்னணியில் இந்த நிறுவனம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-6)

### போதியளவு...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் போதியளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளது. எனவே எரிபொருள் தட்டுப்பாடு என்று வெளிவரும் தகவல்கள் போலியானவை. அது தொடர்பில் பொதுமக்கள் அக்கறைப்படவோ அச்சப்படவோ வேண்டியதில்லை. எரிபொருள் விலைக் குறைப்பை எதிர்பார்த்து விற்பனையாளர்கள் (எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்கள்) கொள்வனவுக் கோரிக்கையை விடுக்காததாலேயே சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசைகள் ஏற்பட்டன. அதாவது இந்த வரிசைகள் செயற்கையாக உருவாக்கப்பட்டனவே அன்றி தட்டுப்பாட்டால் ஏற்பட்ட வரிசைகள் அல்ல - என்றார். (அ-ம)

### சரக்குக்கப்பல்...

சேவையை நடத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 10ஆம் திகதி முதல் அந்த நிறுவனம் சேவையை நடத்த முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காரைக்கால் - காங்கேசன்துறை இடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்துச் சேவை ஆரம்பிப்பதில் இழுபறி நீடித்து வருகின்றது. இந்தியத் தரப்பிலிருந்தே அதற்கான அனுமதிகள் இன்னமும் கிடைக்கப்பெறவில்லை என்று அறியமுடிகின்றது. இதற்கிடையில் பாண்டிச்சேரியிலிருந்து காங்கேசன்துறைக்கான சரக்குக் கப்பல் சேவையை எதிர்வரும் 10ஆம் திகதி முதல் நடத்துவதற்கான அனுமதி ஹேலீஸ் நிறுவனத்துக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. (அ-ஒ,5)

### ஊழலைத்...

முதலீட்டு ஊக்குவிப்பு, சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு, அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு ஆகிய பிரதான 4 தூண்களில் நாட்டின் எதிர்காலம் திட்டமிடப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாக நிலைமாற்றும் செயற்பாட்டுக்கு அவசியமான தொழில்நுட்ப மற்றும் நிலையான முயற்சிகளை அமுல்படுத்த தனியார் துறையிடமிருந்து முன்மொழிவுகளை பெற்றுக்கொள்ளும் கூட்டாய்வு முறையொன்று அறிமுகப்படுத்தப்படும்.

நவீன உலகுக்கும், நவீன தொழில்நுட்பத்துக்கும் ஏற்றவாறு நாட்டின் பொருளாதாரத்தை மாற்றியமைக்காவிட்டால் நாடு பின்நோக்கிச் செல்லும். அதன் முடிவாக நாடு பொருளாதார காலனித்துவமாக மாறிவிடும். எனவே நாம் புதிதாக சிந்தித்து புதிய பயணத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒழுங்குபடுத்தல், கொள்முதல் மற்றும் அரசியல் ஆகிய அனைத்து அம்சங்களிலும் ஊழலை முற்றிலுமாக நிறுத்துவதற்கும், டிஜிற்றல் மயமாக்கல் மற்றும் பொறுப்புணர்வை அடிப்படையாகக் கொண்ட அரசாங்க பொறிமுறையின் மூலம் ஊழலுக்கு எதிரான நடைமுறைகளைச் செயற்படுத்துவதற்கும் ஒரு விசேட செயலணி நிறுவப்படும்.

அடுத்த 5 ஆண்டுகளில் நாம் பொருளாதாரத்தை முழுமையாகஸ்திரப்படுத்துவதோடு, அடுத்த 25 ஆண்டுகளில் இலங்கையை உயர் வருமானம் ஈட்டும் அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

கடின உழைப்பு, அர்ப்பணிப்பு மற்றும் ஓர் இலக்குடன் சரியான பாதையில் செல்வதன் விளைவுகளை இன்று நாம் அனுபவிக்கின்றோம். 70 வீதம் வரை உயர்ந்திருந்த பணவீக்கத்தை தற்போது 25.2 வீதம் வரை குறைக்க முடிந்துள்ளது. இதனால் வாழ்க்கைச் சுமை படிப்படியாகக் குறைந்து வருவதோடு, ஒட்டுமொத்த சமூகமும் இந்த பயனை உணர ஆரம்பித்துள்ளது - என்றார். (அ-ம,24)

### கிளிநொச்சி...

இதையடுத்தே கிளிநொச்சி மாவட்டத்தின் ஊடாக மணல் கொண்டுசெல்ல தடை விதிக்கப்பட்டது.

அத்துடன், கிளிநொச்சி மாவட்டத்தில் மணலை அகழ்வதற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. இந்தத் தடையத் தரவு தொடர்பில் இறுக்கமாகக் கண்காணிக்குமாறும் பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டது. (அ-ம-113)

### கொலை...

செழியன். கடந்த 2013ஆம் ஆண்டு தை மாதம் 28ஆம் திகதி வவுனியா, மருக்காரம்பளை பகுதியிலுள்ள ஓட்டோச் சாரதி ஒருவரின் வீட்டில் புது மனைப் புகுவிழா இடம்பெற்றுள்ளது. குறித்த நிகழ்வு முடிந்ததும் இரவு இடம் பெற்ற விருந்துபசாரத்தின்போது அங்கு கலந்துகொண்டவர்களுக்கிடையில் கைகலப்பு இடம்பெற்றுள்ளது. இதன் பின்னர் அவரவர் தத்தமது வீடுகளுக்குச் சென்றுள்ளனர். மறுநாள் 29ஆம் திகதி காலை 7 மணியளவில் வவுனியா இலங்கை வங்கியில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் ரயில்கடவையில் சடலம் ஒன்று காணப்படுவதாக பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சடலம் தடவியல் பொலிஸாரின் உதவியுடன் மீட்கப்பட்டதுடன், ஓட்டோ ஒன்றில் இரத்தக்கறை காணப்படுவதாகவும் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்திருந்தது.

இதனையடுத்து முதலாம் சந்தேகநபராக வவுனியா, தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த ஓட்டோச் சாரதியும், இரண்டாம் சந்தேகநபராக பிறிதொரு ஓட்டோச் சாரதி சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர். வழக்கு விசாரணைகள் நடைபெற்று தடுப்புக் காவலில் இருந்து இருவரும் விடுவிக்கப்பட்டு, கடந்த 2018ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7ஆம் திகதி குறித்த கொலைச் சம்பவம் தொடர்பில் முதலாம் மற்றும் இரண்டாம் எதிரிகளுக்கு எதிராகச் சட்டமா அதிபர் திணைக்களத்தால் அரச சட்டவாதியான தர்சிகா திருக்குமரநாதனின் நெறிப்படுத்தலில் வவுனியா மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்தபோது ஓட்டோவில் பெறப்பட்ட இரத்த மாதிரியும், கொலை செய்யப்பட்ட நபரின் இரத்த மாதிரியும் ஒன்றுடன் ஒன்று ஒத்துப்போவதை தடவியல் பொலிஸார் மன்றில் சாட்சியத்தின் மூலம் வெளிப்படுத்தினர். இதையடுத்தே முதலாவது சந்தேகநபர் இந்தக் கொலையைப் புரிந்தார் என்பது அரச சட்டத்தரணியால் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நியமிக்கப்பட்டதன் அடிப்படையில் அவருக்கு தூக்குத் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பிட்டார். அதேவேளை, இரண்டாவது சந்தேகநபர் விடுவிக்கப்பட்டார். (அ-ம-18)

### பங்களாதேஷ்...

பங்களாதேஷ் இலங்கை அரசாங்கத்துக்கு இரண்டு தடவைகள் தவணை நீடிப்புச் செய்தது. இந்த நிலையிலேயே தற்போது பங்களாதேஷிடமிருந்து பெற்ற கடனை திரும்பச் செலுத்த இலங்கை அரசாங்கம் தயாராகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-ம)

### இலங்கை...

தயார்ப்படுத்தி வருகின்றேன். அந்தப் பணியை மேற்கொள்ளும் திறன் எமது இளைஞர்களிடம் உள்ளது. இந்த மறுசீரமைப்பு வேலைத்திட்டம், இலகுவான பணியில்லை. நாட்டுக்கு சிறந்த விடயங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் எப்போதும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது.

நாம் எடுக்கும் தீர்மானங்கள் எவ்வளவு கடினமான மற்றும் வேதனையான தாக இருந்தாலும், எதிர்காலச் சந்ததியினருக்காக அந்தக் கடினமான பாதையில் சரியான கொள்கைகளின்படி முன்னேறுவதன் மூலம் மாத்திரமே நாட்டை மீண்டும் உயர்வடையச் செய்ய முடியும் - என்றார். (அ-ம,24)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அனைவரின் கவனத்தையும் ஈர்த்த நவீன் - ரிக்கி ருவிற்றர் பதிவுகள்

கொழும்பு, ஜூன் 2

**பிரிட்டன் நடிகரும், புகழ்பெற்ற ஸ்டாண்ட் அப் நகைச்சுவையாளருமான ரிக்கி ஜேர்வைஸுக்கும், இலங்கையின் முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்கவும் இடையில் ருவிற்றரில் நடந்த கருத்துப் பரிமாற்றம் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது.**

பிரிட்டன் நடிகர் ரிக்கி ஜேர்வைஸ், தமது நகைச்சுவைகளின்போது, மதத்தைப் பயன்படுத்துவது தொடர்பாக இலங்கையின் முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தமது விமர்சனக் கருத்துக்களை ஆரம்பித்திருந்தார்.

ஸ்டாண்ட்அப் நகைச்சுவை எந்தவொரு ஜனநாயகத்திலும் பேச்சு சுதந்திரத்தின் ஒருபகுதியாகும். ஆனால், மற்றவர்களின் மத உணர்வுகளைப் புண்படுத்தி அதை அனுபவிக்கமுடியாது என்று நவீன் திஸாநாயக்க குறிப்பிட்டிருந்தார்.

உங்களுக்கு வேடிக்கையானது இன்னொருவருக்கு வேடிக்கையாக இருக்காது.

இது தனிப்பட்ட பிரச்சினை என்பதால் மதத்தை உரையாடலில் இருந்து விலக்கி வைப்பதே சிறந்தது என நவீன் திஸாநாயக்க ரிக்கி ஜேர்வைஸுக்கு ஆலோசனையும் வழங்கியிருந்தார்.

அதற்கு, "உங்கள் ருவிற் என்னை எவ்வளவு காயப்படுத்தியது என்பதை என்னால் சொல்லமுடியாது, நான் மிகவும் வருத்தப்படுகிறேன். தயவுசெய்து அதை நீக்கிவிட்டு உடனடியாக மன்னிப்புக் கேட்க முடியுமா?" என்று ஜேர்வைஸ், நவீன் திஸாநாயக்கவுக்கு ருவிற் செய்துள்ளார்.

அதற்குப் பதிலளித்த நவீன் திஸாநாயக்க, "மன்னிக்கவும் நான் உங்களைக் காயப்படுத்தினேன். எனினும் எனது ருவிற்றை நீக்கப்போவதில்லை, அது எனது கருத்துச் சுதந்திரம் நண்பரே" என்று ருவிற் செய்துள்ளார்.

அதற்குப் பதிலளித்துள்ள ரிக்கி ஜேர்வைஸ், 'நான் கூற வந்ததையே நீங்களும் கூறியுள்ளீர்கள்' என்ற அர்த்தத்தை தரும் வகையில், பிங்கோ (Bingo) என்று பதிலளித்தார். எனினும் இதன் பின்னர் நவீன் திஸாநாயக்க எந்த ருவிற்றையும் செய்யவில்லை. (எ-இ)


## வாடகைக்கு

யாழ்.கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்துக்கு முன்பாக பாதுகாப்பான சூழலில் அமைந்துள்ள பெரிய வீடு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு உள்ளது. அலுவலக பாவனைக்கோ அல்லது களஞ்சியசாலையாகவும் பயன்படுத்தலாம்.
**பார்வையிட அல்லது மேலதிக விபரங்களுக்கு:**
072 398 9867
(CS/93356)AH-1

## ஆலய பூசகர் தேவை

ஆனைக்கோட்டை உயரப்புலம் உத்துங்க விநாயகர் ஆலயத்தில் ஆலயத்துக்கு சொந்தமான இல்லத்தில் தங்கி இருந்து பூசை (3 வேளை) கடமைகளை நிறைவேற்ற அந்தணர் குலத்தைச் சேர்ந்த குருக்கள் தேவைப்படுகின்றார்.
ஊதியம் / பிறவிடயங்கள் பேசித்தீர்மானிக்கலாம்.
தொடர்புகளுக்கு:
**தலைவர் - 077 691 0573**
**செயலாளர் - 076 105 6343**
(cs25107) N-1

## விற்பனைக்கு

- 4 வெளி வேப்பம் யன்னல் - 3
- 3 வெளி யன்னல் - 1
- 2 வெளி வேப்பம் யன்னல் - 1

யாழ்ப்பாணம் Town
077 199 6117
(cs25106) (N-1)

## தேவை

யாழ். பல்கலைக்கழகத்திற்கு அருகில் உள்ள வியாபார கட்டடத்திற்கு பின்வருவோர் தேவை.
1. மின்னியலாளர் (Electrician)
2. மேசன் மற்றும் உதவியாளர்

தொடர்பு: 077 945 0668
whatsapp - 077 953 0496
(cs25108) N-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு.
* பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் வீதியில்.
* புத்தூர் பிரதான தண்ணீர் தாங்கி அருகாமையில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில், 18 அடி பாதையுடன்.
* ஒரு பரப்பின் விலை 120,000/= மட்டும்.

**தொடர்பு: 076 733 6047, 076 7558 606.**


# சிறுபோகச் செய்கைக்கு உரமானிய வவுச்சர்கள்

இந்த ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கைக்கு விவசாயிகள் மானிய உரத்தை பெற்றுக்கொள்ள அரசாங்கத்தால் வவுச்சர்கள் வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்துக்கான வவுச்சர்கள் கையளிக்கும் நிகழ்வு கிளிநொச்சி கமநலசேவை நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 12ஆயிரம் ஹெக்ரேயருக்கு 226 மில்லியன் பெறுமதியான வவுச்சர்கள் வழங்கப்படவுள்ளன.

அதற்கமைய இந்த ஆண்டு சிறுபோகச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் உரமானிய வவுச்சர்களை கமநலசேவை நிலையங்களில் பெற்றுக்கொள்ளமுடியும். ஒரு ஹெக்ரேயருக்கு 20 ஆயிரம் ரூபாவுக்குரிய வவுச்சரை விவசாயிகள் பெற்று சேதன, அசேதன பசளையைப் பெற்றுக்கொள்ளமுடியும் என கிளிநொச்சி மாவட்ட கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் சு.யதீஸ்வரன் தெரிவித்தார். (ச-113)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மறைவு: 02.06.2021



### அமரர் உயர்திரு முத்துக்குமாரு கனகலிங்கம்

ஆண்டவர் அடி சேர்ந்து
ஆண்டு இரண்டு ஆயிற்று ஆனாலும்
அழுகின்றோம் நாம் அப்பா அப்பா என்று
கண் மணிகளாய் எமை ஆளாக்கிவிட்டு
காற்றோடு போய்விட்டீர்களே
கண்களில் நிறைந்த நீருடனே
கலங்குகின்றோம் நாம் அப்பா அப்பாவென்று

பண்போடும் பாசத்தோடும் எமை
பாதுகாத்த எம் அப்பாவே
பதறுகிறோம் நாம் இன்று
பரமனடி சேர்வீரே!

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இகபரனை இறைஞ்சுகின்றோம்**
**எங்கள் அப்பா**
**மனைவி, பிள்ளைகள்.**
(CS/93549)AH-1


# ஆதன உரிமம் பெற நடமாடும் சேவைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 2

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தெல்லிப்பழை உப அலுவலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வட்டார ரீதியாக நடமாடும் சேவைகள் இடம்பெறவுள்ளன.

இந்த நடமாடும் சேவையில் சோலைவரி அறவீடு, ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பான நடவடிக்கைகள், வியாபார நிலையங்களுக்கான வியாபார உரிமம் பெறுதல், வளர்ப்பு நாய்களுக்கான உரிமம் பெறல் உள்ளிட்டவை மேற்கொள்ளப்படும்.

அதற்கமைய ஜே/277, ஜே/228 பிரிவுகளுக்கு எதிர்வரும் 6ஆம் திகதி சித்தம் புளியடியிலுள்ள கலைச்செல்வி சனசமூக நிலையத்திலும், ஜே/230 பிரிவுக்கு எதிர்வரும் 8ஆம் திகதி பட்டிக்கடவையிலுள்ள ஐக்கிய வாலிபர் சங்க சனசமூக நிலையத்திலும், ஜே/226 பிரிவுக்கு எதிர்வரும் 13ஆம் திகதி நகுலேஸ்வரர் கிராம அலுவலர் அலுவலகத்திலும், ஜே/225 பிரிவுக்கு 14ஆம் திகதி கிளானை கிராம அலுவலர் அலுவலகத்திலும், ஜே/222 பிரிவுக்கு 15ஆம் திகதி வலித்தூண்டல் கிராமஅலுவலர் அலுவலகத்திலும் இடம்பெறவுள்ளன என வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் செயலாளர் சுந்தரேஸ்வரன் சுதர்ஜன் அறிவித்துள்ளார். (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.